# சென்னை முத்தியாலுப்பேட்டை ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(நமது நிருபர்)

சென்னை, ஜுன். 5,

நேற்று (5-6-38) மாலை முத்தியாலுப்பேட்டையில் கூடிய ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பெருந்திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள், தலைவர்கள் சி. டி. நாயகம், சண்முகானந்த சுவாமி, தோழர் பல்லடம் பொன்னுச்சாமி இவர்கள கைது செய்யப்பட்ட செய்தி தெரிந்தபடியால் ஜனங்கள் முன்னைவிட அதிகமான ஊக்கமும், உறுதியும் கொண்டு திரண்டு வந்திருந்தார்கள். முஸ்லிம் சகோதரர்கள் அதிகம் பேர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தோழர் மீனாம்பாள் சிவராஜ் அம்மாள் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர்கள் ஈ வெ. ரா. கே. ஏ. பி. விஸ்வநாதம், கே. எம். பால சுப்பிரமணியம் ஆகிய இவர்கள் நெடுநேரம் பேசினார்கள். கூட்டத்தில் ஊக்கமும் உற்சாகமும் காணப்பட்டது. இரவு பத்து மணிக்கு தோழர் மாணிக்க வாசகம் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது. தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் (36-வது நாள் பட்டினி) தமது உடல் நிலையையும் பாராமல் காரில் வந்து சற்று நேரம் இருந்துவிட்டுச் சென்றார். தலைவர்கள் கைது செய்யப்பட்டதும ஜாமீனில் விடப்பட்டதும் ஜனங்களுக்கு மேன்மேலும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து வருவது இந்தக் கூட்டத்திற்குப் பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்ததைக்கொண்டு அறியக் கிடக்கிறது.